DINAKARAN 02 OCT 2008

# ஈஷா மருத்துவமனை 4ம் தேதி துவக்கம்

கோவை, அக்.2: கோவை ஆலாந்துறையில் ஈஷா மருத்துவமனை வரும் 4ம் தேதி திறக்கப்படுகிறது. சுஸ்லான், பி.சி.ஐ நிறுவனங்களுடன் இணைந்து கிராம மக்கள் மேம்பாட்டு திட்ட துவக்க விழாவும் நடக்கிறது. மருத்துவமனை 24 மணி நேரமும் செயல்படும். குறைந்த செலவில் நவீன மற்றும் மாற்று மருத்துவ முறை களில் சிகிச்சையும், அவசரகால அறுவை சிகிச்சைகள், உள் நோயாளிகளுக்கான மருத்துவம் போன்றவற்றை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற மருத்துவமனை கோவை வாவிபாளையம், சேலம் மாவட்டம் குள்ளப்பநாயக்கனூர் கிராமங்களில் செயல்பட்டு வருகிறது. இதுவரை 60 கிராமங்களை சேர்ந்த 35 ஆயிரம் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. திறப்பு விழாவில் 'ஆரோக்கிய அலை' நடத்திய பல்வேறு சிறப்பு மருத்துவ முகாம்களில் செயலாற்றிய புகழ்பெற்ற மருத்துவ நிறுவனங்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கப்பட உள்ளது.

விழாவுக்கு ஈஷா யோகா மைய நிறுவனர் ஜகிவாசுதேவ் முன்னிலை வகிக்கிறார். எம்.எல்.ஏ கண்ணப்பன் தலைமை தாங்கினார். இதில் மைக்ரோ சாப்ட் நிறுவன இந்திய சேர்மன் ரவி வெங்கடேஷ், சுஸ்லான் நிறுவனத்தை சேர்ந்த ரமேஷ்ராவ், அரசு மருத்துவமனை டீன் குமரன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.